





# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶீ ப ரா வி

மலர் 2 இதழ் 20 28.05.2026



**ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ வராஹ மஹாதேஸிகன் ஸ்ரீபாலாஜி மந்திர், டோம்பிவிலி திருக்கோயிலில் அனுக்ருஹித்து அருளியது:**

திருநகரகுலஜாதம் தே3விஸீதாஸமேதம்
பஹுகுணக;ணயுக்தம் ஸம்யகா சாரசித்தம் ।
விதிஸுதககிதம் தம் வீததோ ஷானுஷங்க 3ம்
தசரதபாரதநயம் தம் ராமசந்த்ரம் நமாமி ।

தண்ட3காரண்யவநே ராம: பரத்துவாஜாஸ்ரமம் கதம்
பரதாக, மநஸந்துஷ்டம் பரதே பாது காமதாத்
கோ பபுரீஸம் கோவிந்தம் பக்தாநாமபயப்ரதம்
ஸ்ரியாத்யுஷித வக்ஷஸ்தம் ஸ்ரீநிவாஸமஹம் பஜே II

# முத்துக்கள்

*நம்முடைய வாழ்க்கைக்கு வேண்டிய நூறு அறிவுரைகள் காயத்ரி ராமாயணத்தில் பொதிந்திருப்பதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப ஒழுகினால் நமது வாழ்க்கை மிகச் சிறப்படையும். இதோ அந்த அறிவுரைகள்.*

*காயத்ரி ராமாயணத்து நீதிகள் :*

*1. தவத்தால் கிடைக்கும் தனிப் பெருமை.*

*2.மறையோதுவதும் தவத் துணையாம். இணையாம் என்றும் சொல்லலாம். (ஸ்வாத்யாயமே தபஸ் தான் என்றுமொரு கருத்து உபநிஷத்தில்)*

*3. கடுந்தவம் தன்னில் களிப்படைக (நிரதம் என்று பதம்).*

*4. ஆசானுக்கேற்ற சீடன்; சீடனுக்கேற்ற ஆசான்.*

*5. பேச்சை அறிதலும் பேசத் தெரிதலும் நன்று. (வாக்வித் என்பதற்கு இரண்டும் அர்த்தங்கள்).*

*6. கேட்டல் கல்வியின் முதற்படியாம்.*

*7. கேட்பதிலே ஒரு முறை உண்டு. (பப்ரச்ச என்று மட்டுமாய் இராமல் பரிபப்ரச்ச என்றது இதனால்).*

*8. முனிவர்கள் எல்லாம் சமமில்லை. (முனி, முனிவரர், முனிபுங்கவர், என்று பல நிலைகளுக்குப் பல பதங்கள்).*

*9.எத்துறையாயினும் சிறப்பு பெறு, (வரம், புங்கவம், ச்ரேஷ்டம், முதலிய பல பதங்கள்). 9*

*10. வேள்வியைக் காப்பது விஷ்ணு தொழில் (யஜ்ஞபதியான விஷ்ணு ராமராக அவதரித்தார்).*

*11.வேள்வி அழிப்பார் பொல்லாதார். (யஜ்ஞக்ன என்று பதம்).*

*12. கொடியரைக் கொல்வது தப்பில்லை..*

*13. அறவோனை ரிஷிகள் பூஜிப்பர்.*

*14. தேவரை ரிஷிகளை உகப்பிக்க.*

*15. தர்மாத்மா எனப் பேர் பெறுக.*

*16 சிறுவரிடம் பரிவாய்ப் பேசு. (வத்ஸ ராம என்று பேசி வாத்ஸல்யத்தைப் பொழிந்தார் விச்வாமித்ரர்).*

*17. நிர்ப்பந்தமிலாமல் ஏவு. (தனு: பச்ய என்று மட்டுமே சொன்னார். வில்லை முறி என்று நிர்ப்பந்திக்கவில்லை, ஆணையிடவில்லை).*

*18 தன் குல முன்னோர் பெருமை கேள். (ராஜ வந்திகள் இதைப் பாடுவார்கள்).*

*19. விழித்தெழுங்காலை மங்கள சொல்.*

*20. நற்குலத்தோரைத் துதி, நன்றாம்.*

*21. பர்த்தாவையே பின்பற்று (பர்த்தாரம் அனு கச்சந்த்யை என்று பதங்கள்).*

*22. பதிவிரதையைப் பாராட்டு.*

*23. எது தந்தாலும் எண்ணித் தா (ஸங்க்யாய என்று பதம்).*

*24. குடும்பத் தலைவர் கொடுக்கட்டும் (ஸவபரரோ ததௌ என்று பதங்கள்).*

*25 ராஜா குடிக்குப் பெற்றோர் போல்.*

*26. ராஜாவுக்குப் பொறுப்பதிகம்.*

*27. ராஜா ப்ரஜையின் ஹிதம் புரிக.*

*28. ராஜாவை மதி, அவர் முக்கியம்*

*29. அண்ணனும் கூடக் குரு போலே.*

*30. கூர்ந்து நோக்குக பல புரியும். (நிரீக்ஷய என்று பதம்).*

*31. சூழ்நிலைக்கேற்ப நடையுடை கொள். (ஜடா மண்டல தாரிணம் என்று பதம்).*

*32. வாய்த்ததை விரும்பி ஏற்றுக்கொள்.*

*33. தாமதமின்றி சான்றோர் பார். (கச்ச சீக்ரம் என்று பதங்கள்).*

*34. பெரியோரைக் காண் நீயே போய் (கமனே என்று பதம்).*

*35. பெரியோரைக் காண் நலமுறலாம்.*

*36. நற்பணிகளை அதில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமே பண்ணலாம். (யதி புத்தி க்ருதா என்று பதங்கள்).*

*37. புகழ் பெற்ற பினும் பெரியோர் காண் (மஹாயணா: என்று பதம்).*

*38. உறவினர்க்குப் பின் தன்னை வை. (பரதஸ்ய, ஆர்யபுத்ரஸ்ய, ஸ்வஸ்ரூணாம் என்பதற்கெல்லாம் பிறகு மம என்கிறாள்).*

*39. கலையழகுணர்வு நல்லது தான்.*

*40. அரும்பொருள் சேகரி; வியப்படைய. (விஸ்மயம் என்று பதம்).*

*41. அவசரப் படவும் நலம் பெறலில் (கச்ச சீக்ரம் என்று பதங்கள்).*

*42. நல்லவனோடு நட்பு பெறு.*

*43. வலியோன் வயஸ்யன் ஆகட்டும். (மஹாபலம் என்று பதம்).*

*44. இடமும் காலமும் எதிர் நோக்கு.*

*45. பிடிக்காததையும் பொறுத்துக்கொள்*

*46. இன்பமும் துன்பமும் ஸஹித்துக்கொள்*

*47. கீழ்ப்படி புதிதொரு தலைமையிலும்,*

*48. தந்தையால் மதிப்பு தனயற்கு.*

*49. ஸித்திக்கறிகுறி முன் வெற்றி.*

*50. எதிரியின் மஹிமை வென்றவற்கணியாம்.*

*51. விக்கிரமம் தான் வீரனணி*

*52. பாக்கியம் வாய்ப்பது சிலருக்கே*

*53. எதனால் பாக்கியம் என்பதறி*

*54. ராமனைக் காண்பது பாக்கியத்தால்; ராமனைக் காண்பதால் பாக்கியம்*

*55. கண்ணழகைக் காண், அதிருஷ்டம்.*

*56. ராமனால் ஸீதைக்கேற்றம்; ஸீதையால் ராமர்க்கேற்றம். (இருவரையும் தொழுவதால் நமக்கேற்றம்)*

*57. அவியை வஹிக்கிற அக்னி தொழு (ஹவ்யவாஹனம் என்று பதம்)*

*58 அக்கினி முன்னிலை உபஸ்தானம்.*

*59. அணுகுக அக்னியைத் தூய்மையுடன் (ப்ரயதா என்று பதம்)*

*60 பிறர் நலம் வேண்டுபவள் பிராட்டி*

*61. உதவினோர்க்குதவல் கடமை தான்.*

*62. வணங்குக ஸித்திகள் பெற்றோரை.*

63. தவத்தால் தீவினை நீக்கிக்கொள்.

64. பணிவு கொள் பண்புடை மேலோர் பால்,

65. பயன்படுத்திக் கொள் சான்றோரை.

66. இதத்தை இதமாய் எடுத்துச் சொல்.

67. பொருட் செறிவுடனே பேசென்றும்.

68. மென்மை பேச்சில் இருக்கட்டும்.

69. ஏதுகள் அலசி எடுத்துச் சொல்.

70. முன் பின் காலம் பொருந்தச் சொல்.

71. இதமுரைப்பாரை இகழாதே

72. அறிவுரை கேட்டுக் கொதிக்காதே.

73. எதிலும் வெறியாய் ஏன் பற்று?

74. தர்மம் வெல்லும் துள்ளாதே

75. பிறனைப் பார்த்தாவது திருந்தலாம்.

76. அற நெறி மட்டும் உயர்நெறியாம்.

77. ஐச்வரியத்தில் பகை வேண்டாம்.

78. வீரன் ஆயினும் வீழ்ச்சி விதி.

79. ஆட்டம் காணில் அதி துயரம்.

80. காலம் மாறின் கோலம் மாறும்.

81. இறுதியில் புரியும் இவர் இன்னார்

82. மோஹம் கண்ணை மறைத்து விடும்.

83. அஸ்த்ரத்தாலும் மயக்கிடலாம்.

*84. அரிப்படை எரிப்பவன் பெரியவனே.*

*85. கை கூப்பிச் சொல் உண்மையை.*

*86. கும்பிடு தேவரை நம்பிய பின்.*

*87. அந்தணர்க்குச் செய் வந்தனமே*

*88. அக்கினி ஸாக்ஷி அனைத்துக்கும்.*

*89. மலையை அசைக்கும் வலிமை மேல்.*

*90. காலம் வந்தால் காட்டு திறல்,*

*91. கஷ்டத்தில் உன் கணவனைச் சார்.*

*92. நட்பில் உச்சம் பொதுவுடைமை.*

*93. ஆற்றலின் மிக்கதறிவு (விஞ்சினால் கெஞ்சு)*

*94 நள்ளுக தம்மின் வலியோனை. (நள்ளுக என்றால் நட்பு கொள்க என்று பொருள்).*

*95. வம்ச விருத்தியை வரவேற்க.*

*96. நல்லவை சேர்ந்தே நடக்கும் போல்.*

*97. முப்பொழுதும் ஜபி காயத்ரி,*

*98. முப்பொழுதும் படி இந் நூலை.*

*99. முழுராமாயணம் காயத்ரி,*

*100 மந்திரம் சேர்த்தால் மஹிமை காண்.*

*101. எல்லாப் பாவமும் அழியுமிதால்.*

*நன்றி : நாவல்பாக்கம் யஞ்யம் ஸ்வாமி*

*****************************